5th November 1966]

பாலாறு பேசின் விதி

* 441 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

வடார்க்காடு மாவட்டத்தில் பம்பு செட்டுகள் அமைப்பதற்கான பாலாறு பேசின் விதியை ரத்து செய்துவிட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : A statement[a] explaining the position is placed on the Table of the House.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த பாலாறு பேஸின் விதிகளை இன்னும் கூட, உணவு கட்டுப்பாடு இருக்கக்கூடிய நேரத்தில்கூட சில இடங்களில் நீக்கிவிட்டு சில இடங்களில் வைத்திருக்கிறார்கள். அதையும் நீக்க சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : சில இடங்களில் அகற்றப்பட்டு சில இடங்களில் வைத்திருக்கக்கூடிய நிலையில் இல்லை. பொதுவாக இருக்கக்கூடிய நிலைகளையெல்லாம் பரிசிலனை செய்து அந்த ரூல்ஸை இப்பொழுது தளர்த்தியிருக்கிறோம். இது தொடர்ந்து பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

உணவு தானியக் கிடங்கு

* 442 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்

கனம் திரு. வெ. ராமைய்யா : சில இடங்களில் அகற்றப்பட்டு

(அ) திருச்சி மாவட்டத்தில், K. சாத்தனூரில் சர்க்காரின் உணவு தானிய சேமிப்பு கிடங்கு (Godown) கட்டப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் எஸ்டிமேட் தொகை எவ்வளவு ?

(உ) அதற்கு பைனல் பில் எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

(எ) கன்டிராக்டரால் ஒப்பந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டனவா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Ten godowns for storage of foodgrains were constructed at K. Sathanur, Tiruchirappalli district, by the State Government on behalf of the Central Warehousing Corporation.

(b) Rs. 44,76,500.

(c) The total value of the contract was Rs. 41,80,147. Deducting Rs. 6,60,344·25 towards cement supplied and a further sum of Rs. 1,04,444 being 2½ per cent of the total value of the contract towards security, the balance of Rs. 34,15,358.75 was paid to him.

(d) Yes.

---

a Printed as Appendix III on pages 405–411.

திரு. து. ப. அழகமுத்து : எஸ்டிமேட் தொகைக்கும், பைனல் பில் தொகைக்கும் மிகவும் வித்தியாசம் இருக்கிறது. அப்படி வருவதற்குக் காரணம் என்ன? கன்டிராக்டர் ஒப்பந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை. லேடிங் எல்லாம் இல்லாமலே சர்க்கார் எடுத்துக்கொண்டுவிட்டார்கள் என்று கூறுகிறார்களே? அது உண்மையா?

கனம் திரு. வெ. ராமையா : அப்படி இல்லை.

சோதனைச் சாவடிகள்

* 443 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள உணவு தானிய பரிசோதனை சாவடிகளில் எவ்வளவு உணவு தானியங்கள் கைப்பற்றப்பட்டன, மாவட்டவாரியாக?

(இ) எவ்வளவு உணவு தானியங்களுக்கு மதிப்புத் தொகை வழங்கப்பட்டது?

(உ) எவ்வளவு உணவு தானியங்கள் பறிமுதல் செய்யப்பட்டன, அதற்கான மதிப்புத் தொகை எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (c) A statement [a] is placed on the table of the House.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஒவ்வொரு தாலுகாவிற்கும் செக் போஸ்டு இருக்கிறது. அண்மையில் செங்கற்பட்டில் மத்திய அமைச்சர் தாலுகா செக் போஸ்டு நீக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. வெ. ராமையா : என்னிடம் தகவல் இல்லை.

திரு. கோ. சி. மணி : பறிமுதல் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள் சரிவர பாமரிக்கப்படாததன் காரணமாக சேதம் அதிகமாக விளைவிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? அப்படியிருந்தால் அதனுடைய மதிப்பு என்ன?

கனம் திரு. வெ. ராமையா : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

புலவர் நா. கோவிந்தன் : கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட உணவுப் பொருள்கள் 6,449 குவிண்டால் என்றும், மதிப்புத் தொகை வழங்கப்பட்ட உணவு தானியங்கள் 6,064 குவிண்டால் என்றும், பறிமுதல் செய்யப் பட்டது 375 குவிண்டால் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தில் கைப்பற்றப்பட்டது 1,119 குவிண்டால் என்றும், பறிமுதல் செய்யப்பட்டது 1,075 குவிண்டால் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக இந்த

[a] Printed as Appendix IV on page 412.